# கல்முனை வரலாறு : ஓர் அறிமுகம்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

***(தலைவர், கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு)***

கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முஸ்லீம் தரப்பினர், கல்முனை முஸ்லீம்களின் தாயகம் - கல்முனை முஸ்லீம்களின் பூர்வீகசொத்து – கல்முனை தென்கிழக்கு அலகின் வாயில் - முகவெற்றிலை என்ற சொல்லாடல்கள் மூலம் ஏதோ முன்பு முஸ்லீம்களுக்குச் சொந்தமானதாக இருந்த கல்முனையை இப்போது தமிழர்கள் ஆக்கிரமிக்கப்போகிறார்கள் என்பது போன்ற தோற்றப்பாட்டைத் திட்டமிட்டுக் கட்டியெழுப்ப முயல்கின்றனர். அதேபோன்று தேர்தல் அரச-ியலைக் குறிவைத்துச் செயல்படும் தமிழ் அரசியல்பிரமுகர்களும் கேள்விஞானத்தை மட்டும் வைத்துக்கொண்டு கல்முனைபற்றிப் பொருள் மயக்கம் தரும் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் கல்முனையின் வரலாறுபற்றியதோர் அறிமுகத்தைத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது.

அப்போதைய ஆங்கில ஆட்சியின் நிருவாக முறையின் கீழ் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டம் தற்போதைய அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக ஒரு தனி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் தனி மாவட்டமாக இருந்தது. வடக்கே வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரை நீண்டிருந்ததே அப்போதைய மட்டக்களப்பு மாவட்டம். இம்மாவட்டம் ‘வன்னிமைகள்’ என அழைக்கப்பட்ட ஒன்பது நிருவாகப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இந் நிருவாகப் பிரதேசத்தின் தலைவர் வன்னிமுதலியார் (Chieftain) என அழைக்கப்பட்டார். ஒவ்வொரு வன்னிமையும் ‘உடையார் பிரிவு’ அல்லது ‘கோறள’ என அழைக்கப்பட்ட உப பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவ் உபபிரிவின் தலைவர்கள் ‘உடையார்’ அல்லது ‘கோறள’ என அழைக்கப்பட்டனர். இவ் உடையார் பிரிவுகள் மேலும் ‘குறிச்சிகள்’ என அழைக்கப்பட்ட பொலிஸ் உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப் பொலிஸ் உபபிரிவின் தலைவர்கள் ‘ஆராய்ச்சி’ அல்லது கம்முலாதானி’ – Village Headman – கிராமத்தலைவர்கள் என அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு குறிச்சிக்கும் பொறுப்பாகக் கிராமத்தலைவர்கள் பணியாற்றினர்.

கல்முனைக் கிராமமானது ‘கரவாகு – நிந்தவூர்ப்பற்று’ வன்னிமைக்குள் அடங்கியிருந்தது. அப்போதைய நிருவாக அலகான ‘வன்னிமை’யைத் தற்போதைய ‘பிரதேச செயலகப் பிரிவு’ உடன் ஒப்பிடலாம். ‘கரவாகு – நிந்தவூர்ப்பற்று’ வன்னிமைக்கு அதன் இறுதிக் காலத்தில் (1932 – 1946) சுமார் பதினான்கு வருடங்கள் எம்.எஸ். காரியப்பர் ‘முதலியார்’ ஆகக் கடமையாற்றிய காலம் தவிர்ந்த அதற்கு முந்திய காலம் முழுவதும் தமிழர்களே இவ் வன்னிமைக்கு ‘முதலியார்’ ஆகப் பதவி வகித்துள்ளனர். கல்முனை ஒரு தனியான உடையார் பிரிவாக இருந்தது.

பின்பு இலங்கை அரசாங்கம் ‘வன்னிமை’ நிருவாக முறைமையைப் பிரதேச இறைவரி உத்தியோகத்தர் அல்லது பிரிவுக்காரியாதிகாரி - D.R.O. (Divisional Revenue Officer) முறைமைக்கு 1946 இல் மாற்றியமைத்தது.

முன்பு நூறு வீதம் தமிழர்களைக் கொண்டிருந்ததும் 'குறிச்சிகள்' என அழைக்கப்பட்ட மூன்று கிராமத்தலைவர் பிரிவுகளை (Village Headman's Division) உள்ளடக்கியிருந்ததுமான கல்முனைக்கிராமம் அதன் அயல் கிராமமான முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைக்குடியுடன் இணைக்கப்பட்டு 1892 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1897ம் ஆண்டின் 5459 இலக்கமுடைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பெற்ற 'சுகாதார நலனோம்புசபை' (Sanitary Board) என்ற சபையினால் 1947 வரை நிர்வகிக்கப்பெற்றதொன்றாகும்.

1946 இல் பிரிவுக்காரியாதிகாரி முறைமை - D.R.O Division - அறிமுகம் செய்யப்பட்டபோது கரவாகு – நிந்தவூர்ப்பற்று பிரிவுக்காரியாதிகாரி பிரிவு (D.R.O. Division) வடக்கே கல்லாறு தாம்போதியிலிருந்து தெற்கே நிந்தவூர்க் களியோடைப் பாலம் வரைக்கும் நீண்டிருந்தது. 1947ஆம் ஆண்டு வரை கல்முனைக் கிராமத்தின் மூன்று கிராமத் தலைவர் பிரிவுகளும் (குறிச்சிகளும்) நூறுவீதம் தமிழர்களையே கொண்டிருந்தன.

கல்முனைக் கிராமம் வேறு. அதன் அயல் கிராமமான கல்முனைக்குடி வேறு. முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த கல்முனைக்குடி ஐந்து குறிச்சிகளாக வகுக்கப்பட்டிருந்தது. கல்முனைக் கிராமத்தையும் கல்முனைக்குடிக் கிராமத்தையும் பிரிக்கும் எல்லையாகச் சுமார் நானூறு வருடங்கள் பழைமை வாய்ந்த கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயிலின் எதிர்ப்புறமாகக் கிழக்கே கடற்கரையை நோக்கிச் செல்லும் 'தரவைப்பிள்ளையார் கோயில் வீதி'யே விளங்கிற்று.

உண்மையில் கல்முனைக்குடியில் அமைந்த 'கோப்பை உடைத்தான் சந்தி' என முன்னர் அழைக்கப்பெற்றதும் தற்போது 'செயிலான் வீதி' என அழைக்கப்பெறுவதுமான இடத்திலிருந்துதான் கல்முனைத் தமிழர்களின் வாழ்விடப் பிரதேசம் வடக்கு நோக்கி இருந்தது. கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் தற்போது 'செயிலான் வீதி' என அழைக்கப்பெறும் வீதிக்கும் இடையேயான இடப்பரப்பில் கல்முனை – அக்கரைப்பற்று பிரதான வீதியை அண்டி தரவைப் பிள்ளையார் ஆலயத்திற்கான மடமும் அதற்குரிய வளவும் அதைச்சுற்றி சுமார் நூறு தமிழ்க் குடும்பங்களும் இருந்தன. இப்பகுதியில் வாழ்ந்த தமிழர்களுக்குக் கல்முனை மூன்றாம் குறிச்சிக் கிராமத் தலைவரே கடமைகள் செய்து வந்தார். இதுவே கல்முனைக் கிராமத்தின் பூர்வீகம் ஆகும்.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் நிருவாக அலகாக இருந்த 'கரவாகு – நிந்தவூர்ப்பற்று' வன்னிமைக்கு அதன் இறுதிக்காலத்தில் முதலியார் ஆகப் பதவி வகித்து, பின் இலங்கை அரசாங்கம் வன்னிமை நிருவாக முறையைப் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (D.R.O - Divisional Revenue Officer) முறைமையாக மாற்றியமைத்ததன் காரணமாக 01.07.1946 இல் தனது வன்னிமைப் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற காலஞ்சென்ற கேற் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் இலங்கையின் சோல்பரி அரசியல் அமைப்பின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 1947ம் ஆண்டு (15.09.1947) கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிப் பிரதமர் காலஞ்சென்ற டி.எஸ்.சேனநாயக்கா தலைமையிலான அரசாங்கத்தில் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரதி அமைச்சராகப் பதவியேற்றார்.

அப்போதைய கல்முனைத் தொகுதியில் கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, காரை-தீவு, மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, இறக்காமம், வரிப்பத்தன்சேனை, அம்பாறை, தமண, உகன ஆகிய ஊர்கள் உள்ளடங்கியிருந்தன.

பொதுமராமத்து இலாகாவினால் (Public Works Department) நிர்மாணிக்கப்பெற்ற 'கல்முனை' பெயர்ப்பலகை முன்பு கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயிலடியில் பிரதான வீதியோரம் இருந்தது. கொழும்பு - இரட்மலான – வெல்லவாய - மட்டக்களப்பு வீதியில் (C.R.W.B Road)கல்முனை ஊர் என்பது கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயிலடியிலிருந்துதான் ஆரம்பித்து வடக்கு நோக்கி கல்முனைத் தாளவட்டுவான் சந்தி வரை இருந்தது. கல்முனை தாளவட்டுவான் சந்தியில் இருந்துதான் பாண்டிருப்புக்கிராமம் ஆரம்பிக்கின்றது. அதாவது கல்முனைக் கிராமத்தின் தெற்கு எல்லை கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியும் வடக்கு எல்லை தாளவட்டுவான் வீதியும் ஆகும்.

1946 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கப் பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பட்டின சபைகள் உருவாக்கப் பெற்றபோது அதாவது கல்முனை 'Sanitary Board' பட்டினசபையாக மாற்றமடைந்தபோது, கல்முனைக்குத் தெற்கே ஐந்து குறிச்சிகளைக் கொண்டிருந்த முஸ்லீம் பெரும்பான்மைக் கிராமமான கல்முனைக்குடியை மூன்று குறிச்சிகளைக் கொண்டதும் 100% தமிழர்களைக் கொண்டதுமான கல்முனையுடன் இணைத்துக் கல்முனைத் தமிழர்களின் விருப்பத்திற்கு மாறாகப் புதிய கல்முனைப் பட்டினசபை (Town Council) 1947இல் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வருமாறு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இப் பட்டினசபை உருவாக்கத்தில் எம்.எஸ்.காரியப்பரின் பாரிய பங்களிப்பு இருந்தது.

கல்முனைப் பட்டினசபைக்குரிய வட்டாரங்கள் (Wards) வகுப்பின்போதும் தமிழர்கள் பாதிப்புற்றார்கள். உண்மையில் கல்முனையின் மூன்று குறிச்சிகளும் கல்முனைக்குடியின் ஐந்து குறிச்சிகளும் இணைக்கப்பெற்று உருவான கல்முனைப் பட்டினசபையானது அதன் 1ஆம், 2ஆம், 3ஆம் வட்டாரங்கள் தமிழ்ப்பெரும்பான்மை வட்டாரங்களாகவும், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வட்டாரங்கள் முஸ்லீம் வட்டாரங்களாகவும் மொத்தம் எட்டு வட்டாரங்கள் அதில் மூன்று தமிழ்ப்பெரும்பான்மை வட்டாரங்களாகவும் ஐந்து முஸ்லீம் பெரும்பான்மை வட்டாரங்களாகவும் அமையுமாறு உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படியும்கூட நடைபெறவில்லை. மாறாகத் தமிழர் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்காகக் கல்முனை 3ஆம் குறிச்சியை 'மாரியார் வீதி' எனப்படும் வீதியை எல்லையாகக் கொண்டு இரண்டாகப் பிரித்து வடக்கே உள்ளவர்களைக் கல்முனை 2 ஆம் குறிச்சிக்குள் சேர்த்து 2ஆம் வட்டாரம் எனவும், தெற்கே உள்ளவர்களைக் கல்முனைக்குடியின் முதலாம் குறிச்சிக்குள் அடக்கி 3ஆம் வட்டாரம் எனவும் வகுத்து கல்முனைப் பட்டினசபையில் மொத்தம் ஏழு வட்டாரங்கள் அதில் இரண்டு வட்டாரங்கள் தமிழ்ப் பெரும்பான்மையாகவும் ஐந்து வட்டாரங்கள் முஸ்லீம் பெரும்பான்மையாகவும் அமையுமாறு கல்முனைப் பட்டினசபை உருவாக்கப்பெற்றது. கல்முனைப் பட்டினசபையில் தமிழ் உறுப்பினர்களைக் குறைக்கும் திட்டமே இது. இயற்கை நீதிக்கு எதிரான இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவதில் இப்பிரதேச முஸ்லீம் அரசியல்வாதிகளின் அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டது.

முதலாவதாக நடந்த கல்முனைப் பட்டினசபைத் தேர்தலின்போது கட்டவிழ்த்துவிடப்பெற்ற வன்செயலினால் கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் செயிலான் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் பாதிப்புற்றுப் பயத்தினால் இடம்பெயர்ந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் மன்னாருக்குச் சென்று குடியேறினர். இவ்வாறு இடம்பெயர்ந்த தமிழர்களின் காணிகள் முஸ்லீம்களினால் அரசியல் செல்வாக்கு மற்றும் பொருளாதார வசதிப் பின்னணியில் ‘அறாவிலை’ க்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

கல்முனைப் பட்டினசபையின் முதலாவது நடவடிக்கை தமிழ்க் குறிச்சியான கல்முனை 2ஆம் குறிச்சியில் அமைந்திருந்த கண்ணகிஅம்மன் ஆலயத்திற்கு அருகில் கடற்கரையோரம் இரண்டு ஏக்கர் நிலம் முஸ்லீம் மையவாடிக்கு ஒதுக்கப்பட்டது. முஸ்லீம் கிராமமான கல்முனைக் குடியில் கடற்கரையோரம் போதுமான நிலம் இருக்கும் போதுதான் இது தமிழர்களுக்கு எதிராகவும் தமிழர் வாழ்விடங்களுக்குள் முஸ்லீம் ஊடுருவலை நோக்கமாகக் கொண்டும் வேண்டுமென்று செய்யப்பட்டது.

இதுமட்டுமல்லாமல், கல்முனைக்குடியிலே முஸ்லீம்களுக்கென்றிருந்த சந்தையை 1950 இல் மூடிவிட்டு முஸ்லீம் உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைப் பட்டினசபையின் அனுசரணையுடன் தமிழர்களின் கல்முனைச் சந்தையில் ஊடுருவி அங்கிருந்த தமிழ், சிங்கள வர்த்தகர்களை இடம்பெயரச் செய்தார்கள்.

1952 இல் இடம்பெற்ற கல்முனைப் பட்டினசபைத் தேர்தலில் போட்டியிட்ட கேற்முதலியார் எம்.எஸ். காரியப்பர் வெற்றியீட்டிக் கல்முனைப் பட்டினசபையின் தலைவராகப் பதவியேற்றார். இவருடைய பதவிக்காலத்தில் கல்முனைத் தமிழர்களுக்குப் பாரபட்சமானதும் கல்முனைப் பட்டினத்தை முஸ்லீம்மயப்படுத்தலை நோக்கமாகக் கொண்டதுமான செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

ஆரம்பத்திலிருந்தே கல்முனைப் பட்டினசபை உருவாக்கத்திலும் அதன் தமிழர் விரோத செயற்பாடுகளிலும் எம்.எஸ். காரியப்பர் அவர்களது பாரிய பங்களிப்பு இருந்தது மட்டுமல்ல அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் அமைந்த பட்டிப்பளை ஆற்றுப்படுக்கைப் பிரதேசத்தில் வெளிமாவட்டங்களிலிருந்து அரச அனுசரணையுடன் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு அதன் காரணமாகப் பின்னாளில் 1959இல் அம்பாறை சிங்களப் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதி உருவாவதற்கும் அதன் விளைவாக 1961 இல் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி துண்டாடப்பெற்று அம்பாறை மாவட்டம் உருவாவதற்கும் காரணமாகவும் ஊக்கியாகவும் அமைந்த ‘சேனநாயக்கா சமுத்திரம்’ நீர்ப்பாசனக்குளம் உருவாவதற்கும் அதன்கீழ் கல்லோயாக்குடியேற்றம் நடைபெறுவதற்கும் சூத்திரதாரியாகவும் இருந்தவர் எம்.எஸ்.காரியப்பர் அவர்களாவார். 1950 ஆம் ஆண்டில் விவசாய மந்திரியாக விளங்கிய காலஞ்சென்ற டட்லி சேனநாயக்கா அவர்கள் பாராளுமன்ற விவாதமொன்றிற்குப் பதிலளித்துப் பேசுகையில் கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தின் பிதாமகர் எம்.எஸ். காரியப்பர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இச்செய்தி 26.05.1950 தினகரன் பத்திரிகையிலும் வெளியாகியிருந்தது. இப்படிப்பட்ட பின்னணியைக் கொண்ட எம்.எஸ். கார-ியப்பரைத் தேடிப் பிடித்துத்தான் 1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் நியமனத்தைத் தமிழரசுக்கட்சி வழங்கியிருந்தது.

இத்தேர்தலில், தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக நின்று தமிழர்களின் வாக்குகளையும் பெற்று வெற்றியீட்டிய எம்.எஸ். காரியப்பர் ஆறுமாதங்களின் பின்னர் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா அவர்களின் கூட்டுக்கட்சியான எம்.ஈ.பி. கட்சியில் இணைந்து உதவி அமைச்சராகப் பதவியேற்றார். பின் 26.09.1959 அன்று பிரதமர் பண்டாரநாயக்கா அவர்களின் கொலைமரணத்தை அடுத்துப் பிரதமரான டபிள்யு. தகாநாயக்காவின் அரசாங்கத்தில் தபால், கலாசார, சமூக சேவைகள் அமைச்சராக நியமனம் பெற்றார். இவருடைய பதவிக்காலத்தில் கல்முனைத் தமிழர்களுக்குப் பாரபட்சமான பல செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார். இத்தகவல்களை இக்கட்டுரையில் பதிவு செய்யக் காரணம் கல்முனைத் தமிழர்கள் நம்பி வாக்களித்த தமிழரசுக்கட்சியின் அரசியல் செல்நெறி கல்முனைத் தமிழர்களுக்குத் தீங்கிழைத்ததே தவிர அவர்களுக்கு எந்தவிதமான சமூக பொருளாதார அரசியல் நன்மைகளையும் பெற்றுத்தரவில்லை என்பதைக் காலங்கடந்து இப்போதாவது உணர்ந்து கொண்டு எதிர்வரும் காலத்தில் கல்முனைத் தமிழர்கள் செல்ல வேண்டிய அரசியல் திசையை அறிவுபூர்வமாகச் சிந்திப்பதற்கு இத் தகவல்கள் துணைபுரியும் என்பதற்காகவே. அன்று எம்.எஸ்.காரியப்பர் தொடக்கிவைத்த தமிழர் விரோத நடவடிக்கைகள்தான் இன்று ஹரீஸ் பாராளுமன்ற உறுப்பினர்வரை தொடர்கின்றது. அப்போதிருந்த (1947-1959) கல்முனைத்தொகுதியில் 1947,1952,1956 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் முறையே எம்.எஸ்.காரியப்பர் (ஐ.தே.க), ஏ.எம்.மேர்சா(சுயேச்சை), எம்.எஸ்.காரியப்பர் (தமிழரசுக்கட்சி) ஆகிய முஸ்லீம் வேட்பாளர்களே வெற்றியீட்டினர்.

1959 இல் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய ஊர்களை உள்ளடக்கியதாகப் புதிய கல்முனைத் தொகுதி உருவாக்கப்பட்டது. இவற்றில் பெரியநீலாவணை, மருதமுனை. பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய ஊர்கள் 1959க்கு முன்னர் (1946 – 1959) பழைய பட்டிருப்புத்தொகுதியின் கீழ் இருந்தவையாகும். இப்புதிய கல்முனைத்தொகுதியை முழுமையாக உள்ளடக்கியதாகப் பின்னாளில் கரவாகுப்பற்றுப் பிரிவுக் காரியாதிகாரி பிரிவு (D.R.O Division) உருவானது.

இக்கல்முனைத் தொகுதி கரவாகுதெற்கு கிராம சபை (சாய்ந்தமருது), கல்முனைப் பட்டின சபை (கல்முனைக்குடி + கல்முனை), கரவாகு வடக்கு கிராம சபை (பாண்டிருப்பு + மருதமுனை + பெரிய நீலாவணை), கரவாகு மேற்கு (சேனைக்குடியிருப்பு + நற்பிட்டிமுனை) ஆகிய நான்கு உள்ளூராட்சி அலகுகளையும் உள்ளடக்கியிருந்தது.

1960 களிலிருந்தே கல்முனைத் தமிழர்களின் கோரிக்கை என்னவாக இருந்ததெனில் கல்முனைப் பட்டினசபையைக் கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு கல்முனையையும் கல்முனைக்குடியையும் முன்பிருந்தது போல் தனித்தனியாக்கி வடக்கே கல்முனையுடன் பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு மற்றும் நற்பிட்டிமுனைக் கிராமங்களை இணைத்து தனியான தமிழ்ப் பெரும்பான்மைப் பட்டினசபையொன்றினை உருவாக்கித்தரும்படியே. இவ்வாறான நடைமுறைகள் முன்பு இலங்கையில் அளுத்கம, வேருவில ஆகிய பட்டினசபைகளில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

1960 மார்ச் மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் எல்.பி.பி. கட்சியில் போட்டியிட்ட எம்.எஸ். காரியப்பரும், 1960 யூலை மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சியின் வேட்பாளரான எம்.சி. அகமட்டும், 1965 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட எம்.எஸ். காரியப்பரும் கல்முனைத் தொகுதியில் வெற்றியீட்டினர். 1965 இல் ஆட்சியமைத்த பிரதமர் டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் தமிழரசுக் கட்சி கூட்டுச் சேர்ந்து தமிழரசுக்கட்சி சார்பில் நியமனம்பெற்ற அப்போதைய 'செனட்' சபை உறுப்பினரான காலஞ்சென்ற மு. திருச்செல்வம் கியு.சி. அவர்கள் (காலஞ்சென்ற நீலன் திருச்செல்வத்தின் தந்தை) தமிழரசுக்கட்சியின் சார்பில் ஸ்தலஸ்தாபன (உள்ளூராட்சி) அமைச்சராகப் பதவியேற்றார்.

## 1967 ஆம் ஆண்டு கல்முனைக் கலவரம்

1967 ஆம் ஆண்டு கல்முனை 1ஆம் குறிச்சியில் அடங்கிய கடற்கரைப் பகுதியின் அரச காணியில் சுமார் 300 முஸ்லீம் குடும்பங்கள் அத்துமீறிக் குடியேற்றப்பட்டு இப்பகுதிக்குக் 'காரியப்பர்புரம்' என்னும் பெயரிடப்பட்டது. தமிழர்கள் அதனை எதிர்த்தார்கள். அதனால் ஏற்பட்ட கலவரத்தின் போது கல்முனையின் தென்எல்லையான கல்முனை 3ஆம் குறிச்சியைச் சேர்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டும், பொருட்கள் நாசமாக்கப்பட்டும், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும் அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதால் அம்மக்கள் அகதிகளாகி அண்டைய தமிழ்க் கிராமங்களில் தஞ்சமடைந்தனர். கலவரம் அடங்கிய பின் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்பிய தமிழர்கள் பலர் பயத்தின் காரணமாகக் குறைந்த விலையில் முஸ்லீம்களுக்குத் தங்கள் வீடு, வளவுகளை விற்றுவிட்டு வேறு இடங்களுக்குச் செல்லலாயினர். இக்கலவரத்தில் சுமார் முப்பத்தியாறு தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. நாகதம்பிரான் கோயில் எரியூட்டப்பட்டது. கண்ணகி அம்மன் ஆலயமும் தரவைப் பிள்ளையார் கோயிலும் சேதப்படுத்தப்பட்டன. இவ்வாறு இடம்பெயர்ந்த சிலர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையைச் சேர்ந்த கறுவாக்கேணியில் குடியேறி வாழத் தொடங்கினர்.

சுமார் 250 வருடங்களுக்கு முன்னரே தமிழர்கள் கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது முஸ்லீம் கிராமங்களுக்கிடையே பரந்து வாழ்ந்தனர்.

1956 இல் சாய்ந்தமருது (கரவாகு தெற்கு) கிராம சபைத் தேர்தலை அடுத்தும் பின்னர் 1967இல் ஏற்பட்ட கலவரங்களை அடுத்தும் கல்முனைக்குடியிலும் சாய்ந்தமருதிலும் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் அனைத்தும் இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தன. தமிழர்கள் வாழ்ந்த இக்கிராமம் 'கரவாகு' என அழைக்கப்பட்டது. இப்பகுதியில் இன்றும் காணப்படும் ஆலய இடிபாடுகள் இதற்குச் சான்றாகும். சுமார் 3500 பேரைக் கொண்ட சுமார் 500 தமிழ்க் குடும்பங்கள் 'கரவாகு' கிராமத்தில் வசித்தன. இக்குடும்பங்கள் பின்னாளில் கல்முனை 1ஆம் குறிச்சி, பாண்டிருப்பு, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓந்தாச்சிமடம் போன்ற இடங்களில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டனர்.

இன்று கல்முனைக்குடி – சாய்ந்தமருது எல்லையில் பிரபல கல்லூரியாக விளங்கும் பதியுதீன் ம.்.மூத் மகளிர் கல்லூரி அமைந்துள்ள இடத்தில் முன்பு அரசாங்க தமிழ்க் கலவன் பாட-சாலை அமைந்திருந்தது. பிரதான வீதியை ஒட்டியதாக அரசடி ஐயனார் கோயில், பிள்ளையார் கோயில் (தற்போது எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுள்ளது) இருந்தன. கல்முனை ஸாகிராக் கல்லூரிக்குச்செல்லும் பாதையை ஒட்டி பிரதான வீதியிலிருந்து உள்ளே விஷ்ணு ஆலயமும் அதற்குரிய வளவும் இருந்தன. 1967 கலவரத்தில் இவை எல்லாமே தமிழர்களால் இழக்கப்பட்டன. இக் கலவரத்தில் 'கரவாகு' கிராமத்தில் மூன்று இந்துக்கோயில்கள் எரியூட்டி அழிக்கப்பட்டன. இன்று இவையெல்லாம் முஸ்லீம் மயமாகிவிட்டன.

இந்தப் பின்னணியிலேதான் கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு கல்முனைப் பட்டினசபையை இரண்டாகப் பிரித்துத் தெற்கிலுள்ள கல்முனைக்குடிக் கிராமத்தையும் அயலிலுள்ள சாய்ந்தமருதுக் கிராமத்தையும் இணைத்து 100% முஸ்லீம்களைக் கொண்டதொரு தனியான உள்ளூராட்சி அலகாகவும், வடக்கிலுள்ள கல்முனையை அயலிலுள்ள பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை மற்றும் சேனைக்குடியிருப்பு கிராமங்களுடன் இணைத்துத் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தனியானதொரு உள்ளூராட்சி அலகாகவும் ஆக்கித் தரும்படி 1960 களிலிருந்தே கல்முனைத் தமிழர்கள் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

1967 இல் கல்முனையில் நிகழ்ந்த மேற்குறிப்பிடப்பட்ட கலவரத்தின் பின்னர் கல்முனைத் தமிழர்களின் சார்பில் காலஞ்சென்ற தோ.அந்தோனிப்பிள்ளை (தோ.அந்தோனிப்பிள்ளை மாஸ்ரர்) தலைமையிலான 'கல்முனை முன்னேற்றச் சங்கம்' 14.04.1967 திகதியிட்டு அப்போதைய ஸ்தலஸ்தாபன அமைச்சர் (உள்ளூராட்சி அமைச்சர்) – தமிழரசுக் கட்சியின் சார்பில் ஐக்கிய தேசியக்கட்சியுடனான கூட்டரசாங்கத்தில் அமைச்சராக இணைந்திருந்த செனட்டர் அமரர் மு.திருச்செல்வம் அவர்களிடம் மேற்குறிப்பிட்டவாறு கல்முனைப் பட்டினசபையை இரண்டாகப் பிரித்துத் தமிழர்களின் எதிர்கால இருப்புக்கு உதவுமாறு கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார். காலஞ்சென்ற தோ.அந்தோனிப்பிள்ளை அவர்கள் தடித்த தமிழரசுவாதியுமாவார். அப்போதைய களநிலையில் ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் இதனைச் சாத்தியமாக்கியிருக்கலாம். அவர் அவ்வாறு தமிழர்களின் இந்நியாயமான கோரிக்கையை ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தற்றுணிவுடன் நிறைவேற்றியிருந்தால் கல்முனைத் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள அவலமும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டிருக்கமாட்டாது. தமிழரசுக்கட்சி அமைச்சரான மு.திருச்செல்வம் அவர்கள் அன்று இக்கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்திருந்தால் இப்போது சுமார் ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் கல்முனை வடக்கு (தமிழ்) பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதிலுள்ள சிக்கல்கள் எதுவும் எழுந்திருக்கவும் மாட்டாது. கல்முனை நகரமும் தமிழர்களிடமிருந்து கைநழுவிப்போயிருக்கவும் மாட்டாது. மு.திருச்செல்வம் அவர்களிடம் பல தடவைகள்

கோரிக்கைகள் விடுத்தும் இந் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பெறவில்லை. அதிகாரத்தில் இருந்தபோதும் கூட தமிழரசுக்கட்சி இதில் அக்கறையற்று இருந்தமை கிழக்குமாகாணத்தமிழர்கள் மீது குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மீது அக்கட்சிக்கு ஆத்மார்த்தமான அக்கறை இருக்கவில்லை என்பதன் வெளிப்பாடேயாகும். அதிகாரம் இருந்தும் அமைச்சர் அவ்வாறு செய்யாமல் விட்டதற்குக் காரணம் எதிர்காலத்தில் வழமைபோல் தமிழரசுக்கட்சி கல்முனைத்தொகுதியிலே நிறுத்துகின்ற முஸ்லீம் வேட்பாளரை வெல்லப்பண்ணுவதற்காகவும் (தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்றிவைத்தால் தங்கள் கட்சியின் முஸ்லீம் வேட்பாளரின் வெற்றியை அது பாதிக்கும் என்பதால்) அதன் மூலம் பாராளுமன்றத்தில் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காகவுமே. ஆனாலும் 18.02.1968 இல் கல்முனைத்தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் அத் தொகுதியில் தமிழரசுக் கட்சி நிறுத்திய முஸ்லீம் வேட்பாளர் மசூர்மௌலானாவை ஆதரித்து அப்போது தமிழரசுக்கட்சியும் இணைந்திருந்த பிரதமர் டட்லி சேனநாயக்கா தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சர் பட்டாளம் தமிழரசுக்கட்சி வேட்பாளரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தும்கூட அத்துடன் அமிர்தலிங்கம் உட்பட முக்கிய தமிழரசுக்கட்சித் தலைவர்கள் கல்முனையில் முகாமிட்டுப் பிரச்சாரம் செய்தும்கூட தமிழரசுக்கட்சி வேட்பாளரான மசூர்மௌலானாவினால் வெற்றிபெற முடியவில்லை. இத் தேர்தலில் அதாவது கல்முனைத் தொகுதி இடைத்தேர்தலில் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் எம்.சி.அகமட் அவர்களே வெற்றியீட்டினார். எந்தத் தேர்தல் வெற்றியை எதிர்பார்த்து கல்முனைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழரசுக் கட்சி தட்டிக் கழித்ததோ அந்த வெற்றி கல்முனைத் தொகுதியிலே இந்த இடைத் தேர்தலில் மட்டுமல்ல அதற்குப் பின் வந்த எல்லாப் பாராளுமன்றப் பொதுத்தேர்தல்களிலுமே தமிழரசுக்கட்சிக்கு எட்டாக் கனியா-கியது. குறிப்பாக 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் டாக்டர் உதுமாலெவ்வை தோல்வியுற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் அகமட் அவர்களே மீண்டும் வெற்றி பெற்றார். தமிழரசுக் கட்சியின் அரசியல் எப்போதும் இப்படித்தான்; சாண் ஏறி முழம் சறுக்கும் அரசியல்.

மேலும் இக்கலவரம் நடந்த காலத்தில் அமரர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் (தந்தை செல்வா) தலைமையிலான இலங்கைத் தமிழரசுக்கட்சி மட்டுமல்ல அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் கூட ஆளும்கட்சியான யூ.என். பியுடன் இணைந்து அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த போதிலும்கூட கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குத் தகுந்த நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும் தவறியிருந்தன. பாராளுமன்ற நலன்கள் சார்ந்த தங்கள் கட்சி அரசியலைக் கொண்டு செல்வதற்காக முஸ்லீம் அரசியல்வாதிகளின் முகம் கோணாமல் பார்த்துக் கொள்வதுதான் இன்றுபோல் அன்றும் யாழ் மேலாதிக்கத் தளத்தில் வேரூன்றி நின்று ‘ குறுந்தமிழ்த் தேசிய’ அரசியல் செய்யும் இக்கட்சிகளுக்குத் தேவையாயிருந்தன. அவர்கள் செய்தது எல்லாம்

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கொழும்பிலிருந்து கல்முனைக்கு வந்து பாதிக்கப்பட்ட தமிழர்களிடம் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமையை ஓதிவிட்டுச் சென்றது மட்டுமே. அம்பாறை மாவட்டத் தமிழர்கள் எதிர்நோக்கிய எந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தமிழரசுக்கட்சி தீர்வைப் பெற்றுக் கொடுத்ததாகச் சரித்திரமே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் கல்முனைக் கலவரத்திற்குக் காரணம் தமிரசுக்கட்சியின் தவறான கொள்கைகளே என்று அமரர் செனட்டர் எம். மாணிக்கம் (முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (1989) அமரர் சாம்.தம்பிமுத்து அவர்களின் துணைவியார் கலாமாணிக்கம் அவர்களின் தந்தை) அப்போதைய 'செனட்' சபையில் கூறிய கூற்றின் உண்மையை இன்று கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. அவரது விபரமான உரை 21.04.1967 Daily mirror ஆங்கில பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

1968ல் பெப்ரவரியில் நடைபெற்ற கல்முனைத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழ் அரசுக்கட்சியில் நிறுத்தபெற்ற முஸ்லீம் வேட்பாளரை ஆதரித்து வாக்களித்த தமிழர்கள் மட்டுமல்ல தமிரசுக் கட்சி வேட்பாளர் மருதமுனையைச் சேர்ந்த எஸ்.மசூர் மௌலானாவை ஆதரித்த மருதமுனை முஸ்லீம்களும்கூட கல்முனைக்குடி, சாய்ந்தமருது முஸ்லீம்களால் அச்சுறுத்தப்பட்டார்கள். கல்முனையில் கலவரங்கள் ஏற்படவும் தமிழ் முஸ்லீம் உறவில் விரிசல் ஏற்படவும் காரணமாயிருந்தது, முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைப் பட்டினசபையின் உருவாக்கமும் அப்பட்டினசபை மேற்கொண்ட தமிழ் விரோதப் போக்குமே ஆகும்.

**1970 – 1977 காலப்பகுதி**

நீர்பாசனத் தேவைகளுக்காகவும் வெள்ளத்தடுப்புக்கும் பயன்பட்டுவந்த பல சிறிய நீர்பாசனக்குளங்கள் பல சங்கிலிக் கோர்வை போல் (Chain of tanks) கல்முனை – பொத்துவில் பிரதானவீதி மற்றும் கல்முனை கிட்டங்கிவீதியை அண்டியதாய் அமைந்திருந்தன. இக் குளங்களின் படுக்கைகள் (Tank Beds) அரசியல் செல்வாக்கின் பின்னணியுடன் அப்போதிருந்த அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரினால் முஸ்லீம் வர்த்தகர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. தாளையடிக்குளம், சந்தாங்கேணிக்குளம், மொகிரான்கேணிக்குளம், கல்லடிக்குளம். பனையான்குஞ்சிக்குளம், ஏத்தாலக்குளம் என்பன அக்குளங்களில் அடங்கும். பகிர்ந்தளிக்கப்பட்ட இந் நீர்ப்பாசனக்குளங்களின் படுக்கைகள் பின்பு மண் நிரப்பப்பட்டுக் கடைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டன. நீர்பாசனத்திணைக்கள அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி இது நடந்தது.

அரசியல் செல்வாக்கும் பொருளாதார பலமும் அற்ற தமிழர்களால் இதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கல்முனையை மேலும் முஸ்லீம் மயப்படுத்தும் நோக்கமே இது. இக் காலப்பகுதியில் கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய காலஞ்சென்ற எம்.சி.அகமட் அரசாங்கக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தார்.

**1977 – 1989 காலப்பகுதி**

1976 ஆம் ஆண்டும் ஒரு தேர்தல் தொகுதி எல்லைகள் மீள்நிர்ணயம் இடம்பெற்ற போதிலும் கல்முனைத் தொகுதியில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை. 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஏ.ஆர்.மன்சூர் கல்முனைத் தொகுதியில் வெற்றியீட்டினார். 1977ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின் 1983 இல் நடைபெற வேண்டிய பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறாது பாராளுமன்றப் பதவிக்காலத்தை மேலும் ஆறு வருடங்கள் நீடிப்பதாகப் பொதுமக்களிடையே 1982இல் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பெற்று அதில் ஜே.ஆர்.ஜயவர்தனா தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் வெற்றியீட்டியதால் 1977 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 1989 ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு ஆண்டுகள் நீடித்திருந்தது.

1977-1989 காலப்பகுதியில் ஜனாப் ஏ.ஆர்.மன்சூர் அவர்கள் கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராகவும் விளங்கினார்.

இக்காலத்தில் கல்முனை முதலாம் குறிச்சியில் வாடிவீடு, கிறவல்குழி மற்றும் சவக்காலையை அண்டிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் முஸ்லீம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு இக்குடியேற்றப்பகுதிக்கு ‘இஸ்லாமாபாத்’ எனப் பெயரிடப்பட்டது. இப்பகுதி முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு என ஒதுக்கப்பெற்றிருந்ததாகும். முஸ்லீம்களால் குடியேற்றப்பட்ட இப்பகுதியிலும் தரவைப்பிள்ளையார் கோவில் வீதியையொட்டியதாகக் கல்முனையின் தெற்கெல்லையிலும் இப்போது முறையே KP/59A மற்றும் KP/59 எனும் இலக்கங்களையுடைய இரு கிராமசேவகர் பிரிவுகள் சட்டத்திற்குப் புறம்பாக ஏற்படுத்தப்பெற்றுள்ளன. இவ்விரு கிராமசேவகர் பிரிவுகளும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்படாதவை. அங்கீகரிக்கப்பெறாத இவ்விரு கிராமசே-சவையாளர் பிரிவுகளும் ரத்துச் செய்யப்படவேண்டும் என்பதும் கல்முனைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுள் ஒன்றாகும். இவ்விரு பிரிவுகளும் உண்மையில் கல்முனையின் முறையே கல்முனை 01 அல்லது KP/61/1 மற்றும் கல்முனை 03 அல்லது KP/59/1ஆகிய கிராமசேவகர் பிரிவுகளுக்குள் அடங்கவேண்டியவை ஆகும்.

மேலும் கல்முனைநகரில் கத்தோலிக்க தேவாலயத்திற்குப் பின்னால் தேவாலயத்திற்குச் சொந்தமான பள்ளப்பூமி இருந்தது. இது உண்மையில் வயல் ஆகும். இப்பூமியில் முன்பு கிறிஸ்தவ இல்லச் சிறுவர்களுக்கான உணவுத் தேவைக்காக வேளாண்மை செய்யப்பட்டது. இப்பூமி பின்னர் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பெற்று இ.போ.ச அலுவலகம் மற்றும் மடுவம் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் பல அமைக்கப் பெற்றதுடன் கல்முனை –கிட்டங்கி வீதியையும் கல்முனை- மட்டக்களப்பு பிரதான

வீதியையும் இணைத்துப் புதிய பாதையொன்று நிர்மாணிக்கப்பெற்று அதற்குக் 'ஹிஜ்ரா வீதி' எனப் பெயரிடப்பட்டது. இவ்வாறுதான் முன்பு நூறு வீதம் தமிழர்களைக் கொண்டிருந்த கல்முனைக்கிராமம் முஸ்லீம் மயப்படுத்தப்பட்டது இவற்றையெல்லாம் முஸ்லீம் தரப்பினர் தங்கள் வசதிக்காக இன்று மூடி மறைக்கப் பார்க்கிறார்கள்.

**<u>நிருவாக மற்றும் உள்ளூராட்சி சீர்திருந்தங்கள்</u>**

1977-1989 காலப்பகுதியில் இலங்கையில் நிர்வாக மற்றும் உள்ளூராட்சி சீர்த்திருத்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்படி முன்பு அமுலிலிருந்த கிராமசபைகளும் பட்டினசபைகளும் இல்லாதொழிக்கப்பெற்று, பதிலாகப் பிரதேச சபைகள் அறிமுகம் செய்யப்பெற்றபோது முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் ஒரு தனியான முஸ்லீம் பெரும்பான்மைப் பிரதேசசபையாக (கரவாகுப்பற்று) உருவாக்கப்பெற்றது. 1987ல் பிரதேசசபைகளின் அறிமுகம் அமுலுக்கு வருமுன்னர் முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் கரவாகு தெற்கு (சாய்ந்தமருது) கிராமசபை, கல்முனை பட்டினசபை, கரவாகு மேற்கு (சேனைக்குடியிருப்பு) கிராமசபை, கரவாகு வடக்கு (பெரிய நீலாவணை) கிராமசபை ஆகிய நான்கு உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கியிருந்தது.

உண்மையில் என்ன நடந்திருக்க வேண்டுமென்றால் முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டாகப் பிரிக்கப் பெற்று தென்பகுதி கரவாகு தெற்கு அல்லது கல்முனை தெற்கு அதுபோல் வடபகுதி கரவாகு வடக்கு அல்லது கல்முனை வடக்கு என அழைக்கப்பெறும் வகையிலும் இரு தனித்தனியான பிரதேசசபைகளாக உருவாக்கப்பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு நடைபெற்றிருந்தால் கரவாகு தெற்கு முஸ்லீம் பெரும்பான்மை பிரதேசசபையாகவும் கரவாகு வடக்கு தமிழ், முஸ்லீம், சிங்களவர்களைக் கொண்ட தமிழ்ப்பெரும்பான்மை பிரதேசசபையாகவும் உருவாகி 1960 ஆண்டிலிருந்தே கல்முனைத் தமிழர்கள் விடுத்து வரும் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பெற்றிருக்கும். மாறாக முழுக் கல்முனைத்தேர்தல் தொகுதியும் அடங்கிய நிலப்பரப்பு தனியான முஸ்லீம் பெரும்பான்மைக் கரவாகுப்பற்று (கல்முனை) பிரதேசசபையாக்கப்பட்டது. இது கல்முனைத்தமிழர்களுக்கு இழைக்கப்பெற்ற பாரிய அரசியல் பாரபட்சமாகும்.

கல்முனைத்தமிழர்கள் இப்புதிய தனியான கரவாகுப்பற்று பிரதேச சபை உருவாக்கத்தின் பின்னரும்கூட கரவாகுப்பற்று பிரதேசசபையைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டாகப்பிரித்து, தென்பகுதியை கரவாகு தெற்கு எனும் பெயரில் முஸ்லீம் பெரும்பான்மைப் பிரதேசசபையாகவும் வடபகுதியைக் கரவாகு வடக்கு எனும் பெயரில் தமிழ், முஸ்லீம் சிங்களவர்களைக் கொண்ட தமிழ்ப்பெரும்பான்மைப் பிரதேசசபையாகவும்

உருவாக்கித்தரும்படி பல பொது அமைப்புக்களின் ஊடாக அரசிடம் வலியுறுத்தி வந்தனர்.குறிப்பாக அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கம் 1988இல் இருந்து ஆரம்பித்து இது விடயமாகத் தொடர்ந்து முயற்சிகளை எடுத்தது.

பழைய நிருவாக அலகான இறைவரி உத்தியோகத்தர் பிரிவு அல்லது பிரிவுக் காரியாதிகாரி பிரிவு- D.R.O Division(Divisional Revenue Officer)முறை நீக்கப்பட்டுப் பதிலாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் (Assistant Government Agents – A.G.A’s Division) 1978இல் ஏற்படுத்தப்பட்டபோது முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும் ஒரு தனியான ஒற்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவான கரவாகுப்பற்று (கல்முனை) உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டது. இது சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மருதமுனை மற்றும் பெரியநீலாவணை ஆகிய தமிழ் - முஸ்லீம் கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. முழுக்கல்முனைத் தேர்தல் தொகுதியையும் உள்ளடக்கியிருந்த நிர்வாக அலகான கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவை மேலே குறிப்பிட்ட தரவைப்பிள்ளையார் கோயில் வீதியை பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரண்டு தனித்தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக அதாவது இரு தனித்தனியான நிர்வாக அலகுகளாகப் பிரிப்பதற்கான முன்னெடுப்புக்களை அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் 1988 நடுப்பகுதியில் மும்முரமாக ஆரம்பித்தது.
இவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவே பின்பு 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது.
இப்பிரிவு அதாவது உதவி அரசாங்க அதிபர்பிரிவு உருவான ஆரம்பகாலத்திலிருந்தே அதாவது 1978லிருந்தே கல்முனைத் தமிழர்களின் கோரிக்கை என்னவாக இருந்ததென்றால் இத் தனியான ஒற்றை உதவி அரசாங்க அதிபர் பிரிவைக் கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு இரு தனித்தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக அதாவது சாய்ந்தமருது மற்றும் கல்முனைக்குடிக் கிராமங்களை உள்ளடக்கிய தென்பகுதியை நூறு வீதம் முஸ்லீம் பெரும்பான்மை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகவும் கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மருதமுனை, பாண்டிருப்பு, மற்றும் பெரியநீலாவணைக் கிராமங்களை உள்ளடக்கிய வடபகுதியைத் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் வாழும் தமிழ்ப் பெரும்பான்மை உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் ஆக்கித்தரும்படியே.
இக்கோரிக்கையை அடுத்தே 12.04.1989 அன்று ஒரு தற்காலிக ஏற்பாடாகக் கல்முனை வடக்குக்கென்று உப செயலகம் ஒன்று திறக்கப்பெற்று அதற்குப் பொறுப்பாகத் தமிழ் உதவி அரசாங்க அதிபர் ஒருவரும் நியமிக்கப்பெற்றார்.
இவ்வாறு 12.04.1989 இல் ஏற்படுத்தப்பெற்ற கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம்தான் இன்றுவரை கடந்த முப்பது வருடகாலமாகப் பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் இன்று கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும்படியான தமிழர்களின் கோரிக்கைக்கு எதிராக முஸ்லீம் தரப்பிலிருந்து ஊடகங்களுக்கு அறிக்கையிடும் சில முஸ்லீம் அரசியல்வாதிகளும் பிரமுகர்களும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் முப்பது வருடங்களுக்கு முன்னர் ஆயுத முனையில் உருவாக்கப்பட்டதாகும் என்கின்றனர். இது முழுக்க முழுக்கச் சோடிக்கட்ட ஒரு பொய் ஆகும்.

1988ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளரும் பதில் செயலாளருமான காலஞ்சென்ற ரஞ்சன்விஜயரட்ண அவர்கள் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார். அவ்வேளை அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் அப்போதைய தலைவரும் முன்னாள் 'நாவிதன்வெளி - அன்னமலை'க் கிராசபையின் தலைவருமான வீ. சின்னத்துரை அவர்களின் தலைமையில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் குழுவொன்று அப்போது பொத்துவில் தொகுதில் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய திருமதி.ரங்கநாயகி பத்மநாதனின் உதவியுடன் ரஞ்சன்விஜயரட்ணவைச் சந்தித்துக் கல்முனைத் தொகுதியில் (கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில் வீதியைப்பிரிக்கும் எல்லையாகக் கொண்டு கல்முனை வடக்குக்கு என தனியான தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகு மற்றும் சம்மாந்துறைத் தொகுதியில், முன்னாள் மல்வத்தை கிராமசபைப் பிரதேசத்தையும் முன்னாள் நாவிதன்வெளி – அன்னமலைக் கிராமசபைப் பிரதேசத்தையும் அவற்றுடன் வீரமுனை மற்றும் வீரச்சோலைக் கிராமங்களையும் இணைத்ததான ஒரு தனியான தமிழ்ப் பெரும்பான்மை அலகு என இரு புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்கித் தரும்படியான கோரிக்கைகள் அடங்கிய - ஜனாதிபதிக்கு முகவரியிட்ட - 22.06.1988 திகதியிட்ட மகஜரைக் கையளித்தனர்.

கொழும்பு திரும்பிய ரஞ்சன்விஜயரட்ண அவர்கள் அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் காலஞ்சென்ற கே.டபிள்யு.தேவநாயகம் அவர்களினுடாக மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக கரவாகு (கல்முனை) வடக்கிலும், நாவிதன்வெளியிலும் இரு சுற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை (Circuit A.G.A Division) திறப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கே.டபியுள்யு, தேவநாயகம் அவர்கள் தனது அமைச்சின் 12.01.1989 திகதியிட்ட M/UA6/89 இலக்கக் கடிதத்தின் மூலம் அம்பாறை அரசாங்க அதிபருக்குப் பணிப்புரை விடுத்திருந்தார். எனினும் அப்போது கல்முனைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற ஏ.ஆர்.மன்சூர் மற்றும் சம்மாந்துறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற எம்.ஏ.அப்தல்மஜீத் ஆகியோரின் அரசியல் தலையீட்டினால் அவை நடைபெறாமல் தடுக்கப்பட்டன.

பின் 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலையடுத்து அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் உப தலைவர் காலஞ்சென்ற கே.கணபதிப்பிள்ளை (அதிபர், கவிஞர் பாண்டியூரன், இவர் பின்னர் 1990 கலவரத்தில் காணாமல் போனார்) அவர்களின் தலைமையில் கல்முனை வடக்கில் தனியான தமிழ்ப்பெரும்பான்மை நிருவாக அலகை – உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலக வாயிலை மறித்துக் கல்முனைத் தமிழர்கள் சாத்வீகப் போராட்டத்தை மேற்கொண்டார்கள். இதனால் கல்முனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் நாளாந்த அலுவல்கள் ஸ்தம்பித்தன.

இவ்விடயம் பொதுநிருவாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இவ்விடயம் பற்றி அப்போதைய பொதுநிருவாக மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் காலஞ்சென்ற யூ.பி.விஜயகோன் அவர்கள், ஏ.ஆர்.மன்சூர் (வர்த்தக கப்பல்துறை அமைச்சர், பீ.தயாரத்தன(காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் அமரர் பியாசிலி ரத்நாயக்க (உள்நாட்ட அலுவல்கள் இராஜசிங்க அமைச்சர்) அ.அமிர்தலிங்கம் (பா.உ),சந்திரதாச கல்பத்தி (பா.உ) நிகால் வக்மீவெப (பா.உ) எம்.எச்.எம்அஷ்ரப் (பா.உ) ஜே.திவ்வியநாதன் (பா.உ) ஆகியோருடன் கலந்துரையாடி மேற்கொண்ட தீர்மானத்தின் படியே 12.04.1989 அன்று கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம் திறக்கப்பட்டது.

பின்னர் 28.07.1993 இல் கூடிய அமைச்சரவையினால் - அமைச்சரவைப் பத்திர இல : 93/600/034(1) - இலங்கை முழுவதும் நாடளாவிய ரீதியில் 28 உப அலுவ-லகங்கள் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டது. உள்நாட்டு அலுவல்கள் மாகாண அமைச்சின் இராஜாங்க செயலாளர் என்.ஏ.ஓவடகே என்பவரால் ஒப்பமிடப்பெற்ற 1993.09.03ம் திகதிட்ட அறிவித்தல் இதனை உறுதிப்படுத்துகின்றது.

1990 ஆம் ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் சார்பில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் முன்னாள் செயலாளர் து. இராமகிருஸ்ணன், இணைச் செயலாளர் காலஞ்சென்ற ஆர். அம்பலவாணர் மற்றும் இந் நூலாசிரியர் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் ஆகியோர் ஓயாமல் தொடர்ந்து மேற்கொண்ட கூட்டுமுயற்சியின் பெறுபேறுதான் இந்த அமைச்சரவை அங்கீகாரமாகும்.

இவ்வாறு தரமுயர்த்தப்பட்ட இருபத்தியெட்டு உப அலுவலகங்களில் வடக்குகிழக்கு மாகாணங்களில் வெருகல் (ஈச்சிலம்பத்தை), ஓட்டிசுட்டான், காரைதீவு, கல்முனை (தமிழ் பிரிவு), கந்தளாய் ஆகியன அடங்கியிருந்தன. இதில் கல்முனை (தமிழ் பிரிவு) தவிர்ந்த ஏனைய இருபத்தியேழு உப அலுவலகங்களும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன. கல்முனை (தமிழ்ப்பிரிவு) தரமுயர்த்தல் அமுலாக்கம் பெறாமைக்குக் காரணம் முஸ்லீம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற எம்.எச்.எம்.அஸ்ரப் பா.உ மற்றும் அமைச்சர் காலஞ்சென்ற ஏ.ஆர்.மன்சூர் ஆகியோரின் அரசியல் விருப்பமின்மையும் தலையீடும் ஆகும்.

**1989க்குப் பின்னர்**

பின்னாளில் அதாவது 1989ம் ஆண்டிற்குப் பின்னர் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குப் பாரபட்சமான பல விடயங்களைப் ''பாம்புக்கும் நோகாமல் கம்புக்கும் நோகாமல்'' எனக் கச்சிதமாகத் திட்டமிட்டு அரசியல் சாதுரியத்துடன் தமிழர் விடுதலைலக்கூட்டணியுடன் நல்லுறவைப்பேணிய வண்ணம் முன்னெடுத்தவர் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்கட்சியின் ஸ்தாபக தலைவரும் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்களே ஆவார். அவர் பாணியை தற்போது ஹக்கீமும் மேற்கொள்கிறார். அதற்குத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு துணை போகிறது.

12.04.1989 அன்று உருவான கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம்தான் கடந்த முப்பது வருடங்களாக இதுவரை தரமுயர்த்தப்படாமல் பெயரளவில் இயங்கி வருகிறது.
உண்மைச் சம்பவங்கள் இவ்வாறிருக்க முஸ்லீம் தரப்பினரில் சிலர் இவ் உபபிரதேச செயலகம் முப்பது வருடங்களுக்கு முன் ஆயுதமுனையில் உருவாக்கப்பட்டதென்று கூறுவதும், பிரதேச செயலகமொன்றினை உருவாக்கும் விடயம் மாகாண சபைகளின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பதைத் தெரிந்து கொண்டும் முஸ்லீம் தரப்பின் சட்ட முதுமானி ஒருவர் இவ் உப பிரதேச செயலக உருவாக்கத்துடன் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் பெயரை இவ்விடயத்திற்குள் இழுப்பதும், இந்திய அமைதி காக்கும் படையை இவ்விடயத்தோடு சம்பந்தப்படுத்துவதும் பொய்யும் தீய நோக்கங்கள் கொண்டதுமாகும்.

முஸ்லீம் தரப்பினர் தங்களது தரப்பு வாதங்களை முன்வைப்பது தவறல்ல, ஆனால் பொய்யான கூற்றுக்களையும் ஆதாரமற்ற தகவல்களையும் முன்வைப்பதையும், கல்முனை குறித்த உண்மை வரலாறுகளை மூடி மறைப்பதையும் தவிர்த்துக் கொள்வதே ஏற்புடையதாகும்.

கடந்த முப்பது வருடகாலமாக கல்முனை வடக்கு உபபிரதேச செயலகப் பிரிவைத் தரமுயர்த்தும் விடயம் நிறைவேற்றப்படாதிருக்கும் சமகாலத்தில் 1987ம் ஆண்டின் 15ஆம் இலக்கப்பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் முன்பு அமுலில் இருந்த கிராம சபைகளும் பட்டினசபைகளும் இல்லா தொழிக்கப்பட்டுப் பதிலாகப் பிரதேச சபைகள் அறிமுகம் செய்யப்பட்டபோது முன்பு கரவாகு தெற்கு கிராமசபை, கல்முனை பட்டினசபை, கரவாகு மேற்கு கிராமசபை, கரவாகு வடக்கு கிராமசபை ஆகிய உள்ளூராட்சி அலகுகளை உள்ளடக்கியிருந்த முழுக் கல்முனைத்தேர்தல் தொகுதியும் ஒரு தனியான ஒற்றை உள்ளூராட்சி அலகாக - கல்முனைப் பிரதேசசபையாக உருவாக்கப் பெற்று பின் 1998.12.11 ஆம் திகதிய 1057/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1999.06.11 ஆம் திகதி தொடக்கம் கல்முனை நகரசபையாகத் தரமுயர்த்தப் பெற்று அதன் பின்னர் மீண்டும் 11.06.2001 ஆம் திகதிய 1188/1

ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2002.04.15ஆம் திகதி தொடக்கம் மாநகர சபையாகவும் தரமுயர்த்தப் பெற்றது.

அதே சமகாலத்தில் சாய்ந்தமருதுக்கென தனியான பிரதேச செயலகப்பிரிவு 2002 இல் ஏற்படுத்தப் பெற்றது. சாய்ந்தமருதுக்கென தனியான பிரதேசசெயலகப் பிரிவை முஸ்லீம் அசியல்வாதிகள் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பிரயோகித்து உருவாக்கிய காரணம் தமிழர்களின் தமிழ்ப்பெரும்பான்மை நிர்வாக அலகுக்கோரிக்கையை அதாவது கல்முனை வடக்குத் தமிழ்ப்பிரிவைப் பிரதேசசெயலகமாகத் தரமுயர்த்தும் கோரிக்கையை ஐதாக்குவதற்கே ஆகும். ஆனால் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தினராலும் கல்முனைத் தமிழ்ச் சமூகத்தினராலும் கடந்த முப்பது வருடகாலத்தில் கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி அவ்வப்போது எடுக்கப்பட்ட அரசாங்க உயர் மட்டத்திலான முயற்சிகள் - சாத்வீகப் போராட்டங்கள்- உண்ணாவிரதப் போராட்டங்கள் என்று எதுவுமே பலனளிக்கவில்லை.

இத்தகையதொரு பின்னணியில்தான் கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விடயம் இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. இந்தக் கட்டத்தில்தான் தமிழர்களின் நியாயமான கோரிக்கையைக் குழப்பியடிப்பதற்காக முஸ்லீம் தரப்பினர் கல்முனைக்குடியையும் கல்முனையுடன் சேர்த்து முஸ்லீம் பெரும்பான்மையாகச் சோடித்துக்காட்டிக் கல்முனைக்கும் தாங்களே சொந்தம் எனக்காட்ட முயல்கிறார்கள். கல்முனைக்குடியைக் கல்முனையுடன் சேர்த்துக்காட்டி முஸ்லீம் பெரும்பான்மையெனக் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. கல்முனைத்தரவைப் பிள்ளையார் கோயில் வீதியை எல்லையாக வைத்து கல்முனைவடக்கு, கல்முனைதெற்கு எனப்பார்க்க வேண்டுமேயொழிய கல்முனைக்குடியை கல்முனையோடு சேர்த்துக் கணித்துத் தீர்மானம் எடுப்பது தவறாகும். ஏனெனில் பூர்வீகமாகக் கல்முனையும் கல்முனைக்குடியும் வெவ்வேறான தனித்தனிக்கிராமங்களாகும். கல்முனையை முஸ்லீம் தரப்பினர் தங்களது என்று கூறுவது முழுக்க முழுக்க ஓர் ஆக்கிரமிப்பு ஆகும். இதனைத் தமிழர்கள் அனுமதிக்க முடியாது.

கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரத்தில் முஸ்லீம் தரப்பினர் கல்முனை என்பது தெற்கே கல்முனை ஸாஹிராக் கல்லூரியிலிருந்து ஆரம்பித்து வடக்கே தாளவட்டுவான் வரையும் உள்ளதாகச் சித்தரித்து அதனையே தங்களது பூர்வீகம் எனச்சொந்தம் கொண்டாடுகின்றனர். அதற்குச் சார்பாக அவர்கள் முன்வைப்பது 1892 ஆம் ஆண்டின் 18ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் 1897 ஆம் ஆண்டில் 5459 இலக்கமுடைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பெற்ற அரச-வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பெற்ற அப்போதைய கல்முனை 'சனிற்றறி' சபை (Sanitary Board) யின் எல்லைகளையேயாகும். இது நன்கு திட்டமிட்டுச் சோடிக்கப்பட்ட தவறான வாதமாகும்.

கல்முனைக்குடியைக் கல்முனையோடு பிணைத்து 1897 இல் கல்முனை என்ற பெயரில் ‘சனிற்றறி’ சபை (Sanitary Board) நிறுவப்பட்டது என்பதனாலோ அல்லது பின்னாளில் இது 1946 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பட்டினசபைகள் சட்டத்தின்கீழ் 1947இல் கல்முனை என்ற அதே பெயரில் பட்டினசபை (Town council) ஆக்கப்பட்டது என்பதனாலோ இரு வெவ்வேறு தனித்தனிக்கிராமங்களான கல்முனையும் கல்முனைக்குடியும் ஒரே தனிக்கிராமமாகிவிடமுடியாது.

தற்போது கல்முனைத்தேர்தல் தொகுதி, கல்முனை மாநகரசபை, கல்முனை (பிரதான) பிரதேச செயலகம் என்பன சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை, நற்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய தனித்தனிக்கிராமங்களை உள்ளடக்கியுள்ளவை.

கல்முனை என்ற பெயரில் தேர்தல் தொகுதியும், கல்முனை என்ற பெயரில் மாநகர சபையும், கல்முனை என்ற பெயரில் பிரதேச செயலகமும் அமைந்துள்ள காரணத்தால் முழுக்கல்முனைத் தேர்தல் தொகுதியும், முழுக்கல்முனை மாநகரசபைப் பிரதேசமும், முழுக்கல்முனைப் பிரதேச செயலக பிரிவுப்பிரதேசமும் கல்முனை என்னும் பெயரில் ஒரு தனிக்கிராமம் ஆகிவிடமுடியாது.

அது போலவே 1897ல் கல்முனையும் கல்முனைக்குடியும் இணைந்த ‘சனிற்றறி’ சபை (Sanitary Board) கல்முனை என்ற பெயரில் அமைந்த காரணத்தாலோ 1947இல் கல்முனையும் கல்முனைக்குடியும் இணைந்து கல்முனை என்ற பெயரில் பட்டினசபையாக அமைந்த காரணத்தாலோ முழுச் ‘‘சனிற்றறி’ சபைப்பிரதேசமும், முழுப் பட்டினசபைப் பிரதேசமும் கல்முனை என்னும் பெயரில் ஒரு தனிக்கிராமமாகி விடமுடியாது என்பதை முஸ்லீம் தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

முன்பு கல்முனைக்குடியானது கல்முனையுடன் சேர்ந்ததாக இருந்ததென்றால் கல்முனைக்குடியின் ஐந்து குறிச்சிகளும் கல்முனையின் மூன்று குறிச்சிகளுடன் தொடராக வருமாறு கல்முனை 04ம் குறிச்சி, கல்முனை 05ம் குறிச்சி, கல்முனை 06ம் குறிச்சி, கல்முனை 07ம் குறிச்சி, கல்முனை 08ம் குறிச்சி என்றல்லவா இருந்திருக்க வேண்டும். அவ்வாறு அமையவில்லையென்பதே கல்முனையும் கல்முனைக்குடியும் இரு வெவ்வேறு தனித்தனிக்கிராமங்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. கல்முனைக்குடியானது கல்முனைக்குடி 01ம் குறிச்சி, கல்முனைக்குடி 02ம் குறிச்சி, கல்முனைக்குடி 03ம் குறிச்சி கல்முனைக்குடி 04ம் குறிச்சி, கல்முனைக்குடி 05ம் குறிச்சி என்றே இருந்தது.

உண்மைகள் இப்படியிருக்கும்போது முஸ்லீம் தரப்பினர் கல்முனைக்குடியைக் கல்முனையுடன் பிணைத்துத் தெற்கே கல்முனை ஸாஹிராக்கல்லூரியில் இருந்து

வடக்கே தாளவட்டுவான் வரையிலுள்ள பிரதேசத்தைக் கல்முனை எனச் சித்தரித்துக் காட்டுவது கல்முனைத் தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பும் எதிர்காலத்தில் கல்முனைத் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தலுமாகும் என்பதைத் தமிழர் தரப்பினரும் விடயத்திற்கான அமைச்சரும் அமைச்சின் உயர்அதிகாரிகளும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும் புரிந்துகொள்ள வேண்டும்.

1897இல் நிறுவப்பட்ட கல்முனைச் 'Sanitary Board' இனதும் 1947இல் உருவாக்கப்பெற்ற கல்முனைப் பட்டினசபையினதும் வடக்கு எல்லையான தாளவட்டுவான் வீதியைக் கல்முனைக்குடியின் வடக்கு எல்லையாகச் சித்தரிப்பது திட்டமிட்ட 'சதி' ஆகும். கல்முனைக்குடியின் வடக்கு எல்லை உண்மையில் கல்முனைத்தரவைப்பிள்ளையார் கோயில்வீதியே ஆகும்.

கல்முனை 'Sanitary Board' மற்றும் கல்முனைப் பட்டினசபை என்கின்ற சொற்பதங்களால் சுட்டப்படும் நிலப்பரப்பும் கல்முனை என்ற சொற்பதத்தால் சுட்டப்படும் கல்முனைக்கிராமத்தின் நிலப்பரப்பும் ஒன்றல்ல. கல்முனைக்கிராமம் என்பது கல்முனை 'Sanitary Board' மற்றும் கல்முனைப் பட்டினசபையிலிருந்து கல்முனைக்குடிக் கிராமம் நீங்கிய நிலப்பரப்பாகும். எனவே கல்முனை என்பது தரவைப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் தாளவட்டுவான் வீதிக்கும் இடைப்பட்ட பிரதேசமே என்பது வெள்ளிடைமலை. எனவே கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரத்திற்கான தீர்வு என்று வரும்போது கல்முனை தெற்கு முஸ்ஸீம் பிரதேச செயலகப்பிரிவுடன் மருதமுனை மற்றும் பெரியநீலாவணை முஸ்ஸீம் பிரிவு உட்பட மற்றும் நற்பிட்டிமுனை முஸ்லீம் பிரிவு ஆகியவற்றை நிலத்தொடர்பற்ற வகையில் இணைத்துக்கொள்ளும் விடயத்திலும், இவ்வாறு நிலத்தொடர்பற்ற முறையிலான இணைப்பு சாத்தியப்படாதவிடத்து, தற்போதுள்ள பெரியநீலாவணை முஸ்லீம் பிரிவுகளையும் மருதமுனைக்கிராமத்தையும் இணைத்து மருதமுனைக்கென தனியானதொரு பிரதேச செயலகப்பிரிவை ஏற்படுத்தும் விடயத்திலும் மட்டுமே தமிழர் தரப்பு நெகிழ்வுத்தன்மையுடன் சமரசத்திற்குச் செல்லலாமேதவிர 1989ம் ஆண்டு கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தின் ஆளுகையின்கீழ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட கல்முனை 01, கல்முனை 02, கல்முனை 03, பாண்டிருப்பு 01, பாண்டிருப்பு 02, பெரியநீலாவணை 01, பெரியநீலாவணை 02, நற்பிட்டிமுனை 01, நற்பிட்டிமுனை 02, சேனைக்குடியிருப்பு ஆகிய அப்போதைய பத்து கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தையே தரமுயர்த்த வேண்டுமென்ற விடயத்தில் தமிழ்த்தரப்பிடம் எந்த நெகிழ்விற்கும் சமரசத்திற்கும், கிஞ்சித்தும் இடமில்லை; இடமிருக்கக்கூடாது. தமிழர் தரப்பு இன்னும் நெகிழ்ந்து கொடுக்க வேண்டுமென்றால் மேற்படி பத்துகிராம சேவையாளர் பிரிவுகளுடன் நற்பிட்டிமுனை முஸ்லீம் பிரிவை மட்டும் இணைத்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆகும் போது நிலத்தொடர்போடு அமைந்த பெரியநீலாவணை முஸ்லீம்பிரிவுகளும் மருதமுனைக்கிராமமும் இணைந்த தனியான

உத்தேச மருதமுனை பிரதேச செயலகப்பிரிவு 100% முஸ்லீம்களுடன் உருவாக வாய்ப்புண்டு. இதனைத் தமிழர்கள் எதிர்க்கவில்லை.

தமிழர்தரப்பைப் பொறுத்தவரையில் கல்முனையையும், கல்முனைக்குடியையும் பிரிக்கும் பூர்வீக எல்லையாக விளங்கிய கல்முனைத்தரவைப் பிள்ளையார் கோயில் வீதிக்கு இப்பால் அதாவது வடக்கே ஒரு அங்குலமாவது விட்டுக்கொடுப்பது தற்கொலைக்குச் சமமாகும். அதாவது கல்முனைத்தரவைப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் வடக்கே உள்ள தாளவட்டுவான் வீதிக்கும் இடையிலே அமைந்தும் முன்னைய கல்முனையின் 1ஆம், 2ஆம், 3ஆம் குறிச்சிகளில் அடங்கியுமிருந்த பிரதேசத்தின் ஒருசிறு துண்டினையாவது விட்டுக்கொடுக்கத் தமிழர் தரப்பினர் இடமளிக்கக்கூடாது.

**கல்முனை நகரின் (1ஆம்,2ஆம்,3ஆம் குறிச்சிகள்) தற்போதைய குடிப்பரம்பல் வருமாறு**

| கிராமசேவகர் பிரிவின் பெயர் | கிராமசேவகர் பிரிவின் இல | தமிழர் | முஸ்லீம் | சிங்களவர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கல்முனை 01 | KP/61/1 | 834 | - | 11 | 229 | 1074 |
| கல்முனை 01 A | KP/61/2 | 1019 | - | 05 | 136 | 1160 |
| கல்முனை 01 B | KP/61/3 | 681 | - | 05 | 109 | 795 |
| கல்முனை 01 C | KP/61/4 | 706 | 02 | 43 | 12 | 763 |
| கல்முனை 01 D | KP/61/5 | 883 | 01 | 03 | 08 | 895 |
| கல்முனை 01E | KP/61/6 | 997 | - | 05 | 34 | 1036 |
| கல்முனை 02 | KP/61/7 | 1682 | 07 | 17 | - | 1706 |
| கல்முனை 02 A | KP/61/8 | 1026 | - | 06 | - | 1032 |
| கல்முனை 02 B | KP/61/9 | 744 | - | 13 | 09 | 766 |
| கல்முனை 03 | KP/59/1 | 538 | - | 06 | - | 544 |
| கல்முனை 03 A | KP/59/2 | 399 | 03 | 23 | 38 | 463 |
| கல்முனை முஸ்லீம் பிரிவு | KP/59 | - | 3992 | - | - | 3992 |
| இஸ்லாமாபாத் + கல்முனை நகர் | KP/59 A | 18 | 1191 | 07 | - | 1216 |
| மொத்தம் | | 9537 | 5196 | 134 | 575 | 15412 |

* உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்படாத சட்ட விரோதமானவை.

கடந்தகாலங்களில் கல்முனையை நன்கு திட்டமிட்டு முஸ்லீம் அரசியல் வாதிகள் முஸ்லீம் மயப்படுத்தியும் கூட கல்முனை நகரில் தமிழர்கள் இன்றும் பெரும்பான்மையாகவே உள்ளனர் என்பதை மேற்குறிப்பிட்ட அட்டவணை வெளிப்படுத்துகின்றது. இந்த யதார்த்தம் முஸ்ஸீம் தரப்பினரால் மூடி மறைக்கப்பட்டுவருகிறது.

**இணைப்பு**

**கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தல் தொடர்பிலான கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் தீர்வு யோசனை**

1989ஆம் ஆண்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட பிரகடனத்தின் அடிப்படையில்தான் தீர்வு இருக்க வேண்டும். எனினும் சுமார் முப்பது ஆண்டுகளின் பின்னர் மாற்றமடைந்துள்ள தற்போதைய களநிலை கருதி ஒருசில மாற்றங்களைச் செய்யவேண்டும்.

1989ஆம் ஆண்டில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு விடுத்த பிரகடனத்தில், கல்முனை தமிழ்ப் பிரிவு என அழைக்கப்படும் கல்முனை வடக்குப் பிரிவில் பத்து கிராம சேவகர் பிரிவுகள் அடக்கப்பட்டன. அவையாவன கல்முனை1, கல்முனை2, கல்முனை3, பாண்டிருப்பு1, பாண்டிருப்பு2, பெரியநீலாவணை1, பெரியநீலாவணை2, நற்பிட்டிமுனை1, நற்பிட்டிமுனை2 மற்றும் சேனைக்குடியிருப்பு என்பனவாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள பத்து கிராம சேவகர் பிரிவுகளும்தான் பின்னாளில் இருபத்தியொன்பது (29) தமிழ்ப்பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளாகின. பின்வரும் அட்டவணை அதனைத் தெளிவுபடுத்தும்.

| தொ. இல | 1989இல் | இல | 1989க்குப் பின் (தற்போது) |
|---|---|---|---|
| 01 | கல்முனை - 01 | 1 | கல்முனை 01 |
| | | 2 | கல்முனை 01A |
| | | 3 | கல்முனை 01B |
| | | 4 | கல்முனை 01C |
| | | 5 | கல்முனை 01D |
| | | 6 | கல்முனை 01E |
| 02 | கல்முனை - 02 | 7 | கல்முனை 02 |
| | | 8 | கல்முனை 02A |
| | | 9 | கல்முனை 02B |
| 03 | கல்முனை – 03 | 10 | கல்முனை 03 |
| | | 11 | கல்முனை 03A |
| 04 | பாண்டிருப்பு – 01 | 12 | பாண்டிருப்பு 01 |
| | | 13 | பாண்டிருப்பு 01A |
| | | 14 | பாண்டிருப்பு 01B |
| | | 15 | பாண்டிருப்பு 01C |
| 05 | பாண்டிருப்பு – 02 | 16 | பாண்டிருப்பு 02 |
| | | 17 | பாண்டிருப்பு 02A |
| | | 18 | பாண்டிருப்பு 02B |
| | | 19 | பாண்டிருப்பு 02C |
| 06 | பெரியநீலாவணை - 01 | 20 | பெரியநீலாவணை01 |
| | | 21 | பெரியநீலாவணை01A |
| | | 22 | பெரியநீலாவணை01B |
| 07 | பெரியநீலாவணை - 02 | 23 | பெரியநீலாவணை - 02 |
| 08 | நற்பிட்டிமுனை - 01 | 24 | நற்பிட்டிமுனை - 01 |
| | | 25 | நற்பிட்டிமுனை – 02 |
| 09 | நற்பிட்டிமுனை - 02 | 26 | நற்பிட்டிமுனை – 03 |
| 10 | சேனைக்குடியிருப்பு | 27 | சேனைக்குடியிருப்பு 01 |
| | | 28 | சேனைக்குடியிருப்பு01A |
| | | 29 | சேனைக்குடியிருப்பு01B |

நற்பிட்டிமுனை முஸ்லீம்பிரிவும் மருதமுனையும் பின்னாளில் அதாவது 1989க்குப் பின்னர் பெரியநீலாவணை முஸ்லீம்பிரிவுடனும் கல்முனை முஸ்லீம்பிரிவுடனும் இஸ்லாமாபாத் மற்றும் கல்முனை நகருடனும் சேர்ந்து பதினைந்து (15) முஸ்லீம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளாயின. அவை வருமாறு.

| இல | கிராம சேவகர் பிரிவின் பெயர் | கிராம சேவகர் பிரிவின் இலக்கம் |
|---|---|---|
| 01 | பெரிய நீலாவணை முஸ்லீம் பிரிவு -1 | KP/72 |
| 02 | பெரிய நீலாவணை முஸ்லீம் பிரிவு -2 | KP/72A |
| 03 | மருதமுனை – 2 | KP/67 |
| 04 | மருதமுனை – 3 | KP/67A |
| 05 | மருதமுனை – 1 | KP/67B |
| 06 | மருதமுனை – 4 | KP/67/C |
| 07 | மருதமுனை – 5 | KP/67D |
| 08 | மருதமுனை – 6 | KP/68 |
| 09 | நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு – 02 | KP/64B |
| 10 | நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு – 03 | KP/64 |
| 11 | நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு – 01 | KP/64A |
| 12 | நற்பிட்டிமுனை 04 | KP/64C |
| 13 | நற்பிட்டிமுனை 05 | KP/64D |
| 14 | கல்முனை முஸ்லீம் பிரிவு | KP/59 |
| 15 | இஸ்லாமாபாத் + கல்முனை நகர் | KP/59A |

இந்தப் பதினைந்து முஸ்லீம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்பற்ற முறையிலே கல்முனை தெற்கு முஸ்லீம் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவற்றில் கல்முனை முஸ்லீம்பிரிவும், இஸ்லாமாபாத் + கல்முனை நகர்ப்பிரிவும் 1989 இன் பின்னர் சட்டத்திற்குப் புறம்பாக ஏற்படுத்தப் பெற்ற கிராமசேவகர் பிரிவுகளாகும். இப் பதினைந்து கிராமசேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்பற்ற முறையிலே கல்முனைதெற்கு முஸ்லீம் செயலகப் பிரிவின் கீழ் இயங்குவது நிர்வாகரீதியாக ஒரு முரண்பாடாகும்.

கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில்வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டால் இவ்வீதிக்குத் தெற்கே உள்ளபகுதி கல்முனை தெற்கும் (கல்முனைக்குடி) வடக்கில் உள்ளபகுதி கல்முனைவடக்கும் (கல்முனை நகர் + பாண்டிருப்பு + மருதமுனை + பெரியநீலாவணை+ சேனைக்குடியிருப்பு + நற்பிட்டிமுனை) ஆகும்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு எனும்போது பூகோளரீதியாக அதன் வரையறுக்கப்பட்ட எல்லைகள் வருமாறு.

**வடக்கு : மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் எல்லை (பெரிய கல்லாறு கிராமம்.**

**தெற்கு : கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயில் வீதி (கல்முனைக்குடிக் கிராமம்)**

**கிழக்கு : வங்காள விரிகுடாக் கடல்**

**மேற்கு : கிட்டங்கி வாவி**

இந்த எல்லைகளால் வரையறுக்கப்பட்ட கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு என்பது பூகோளரீதியாக நிலத்தொடர்புள்ள வகையிலே மேற்குறிப்பிடப்பட்ட 29 தமிழ்ப் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளையும் 15 முஸ்லீம் கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது. அதாவது இந்த 44 (29+ 15) கிராமசேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்புள்ள வகையிலேயே அமைந்துள்ளன.

ஆனால், இதன் குடிப்பரம்பல் பின்வருமாறு அமைகிறது.

| | | |
|---|---|---|
| முஸ்லீம் | : | 31,338 |
| தமிழர் | : | 31,199 |
| சிங்களவர் | : | 168 |
| ஏனையோர் | : | 1,083 |
| **மொத்தம்** | **:** | **63,788** |

இது முஸ்லீம் பெரும்பான்மையாகவும் தமிழர்களும் முஸ்லீம்களும் எண்ணிக்கையில் கிட்டத்தட்டச் சமனாகவும் அமைவதால் கடந்த முப்பதுவருடகால கல்முனைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யமாட்டாது. ஆகவே, இது திருப்தியான தீர்வாகமாட்டாது. ஆனால் இதற்குள் பெரியநீலாவணை முஸ்லீம் பிரிவும் (KP/72, KP/72A, ஆகிய கிராமசேவகர் பிரிவுகள்) மருதமுனைக் கிராமமும் (KP/67, KP/67A, KP/67B, KP/67C, KP/67D மற்றும் KP/68 ஆகிய கிராம சேவகர் பிரிவுகள்) இணைந்து மொத்தம் 08 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன பெரியநீலாவணை முஸ்லீம் பிரிவும் மருதமுனைக் கிராமமுமம் அருகருகே நிலத்தொடர்புள்ளவை.
இந்தப்பின்னணியில், மேற்குறிப்பிட்ட 29 தமிழ்ப் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளை மட்டுமே உள்ளடக்கியதான உபபிரதேச செயலகத்தையே தரமுயர்த்தித் தருமாறு எழுந்தமானமாகத் தமிழர் தரப்புக் (கல்முனை வடக்கு சிவில் சமூகத்தினர்) கோருவது கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு என்பதன் உண்மையான தாற்பரியத்தை உணர்த்துவதாயில்லை.

மேற்படி 29 தமிழ்ப்பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளை மட்டுமே உள்ளடக்கியதாக உத்தேச கல்முனை வடக்குப் (தமிழ்) பிரதேச செயலகப்பிரிவு தரமுயர்த்தப்பட்டால் மேலே குறிப்பிட்ட 15 முஸ்லீம் பெரும்பான்மைக் கிராம சேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்பற்ற வகையிலே கல்முனை தெற்கு முஸ்லீம் செயலகப் பிரிவின் கீழ் தொடர்ந்திருப்பது ஒரு பிழையான முன்னுதாரணமும் நிர்வாகச் சிக்கல் நிறைந்ததுமாகும். நிலத் தொடர்பற்ற துண்டுகளாக இருக்கும் இவை சீரானநிர்வாகத்திற்கு இடைஞ்சலாக இருக்கும். இந்த விடயம்தான் தீர்வுக்குத் தடையாகவும் உள்ளது. எனவே நடைமுறைச் சாத்தியமான பின்வரும் தீர்வு யோசனை முன்வைக்கப்படுகின்றது.

**இல : 01** மேற்குறிப்பிட்ட கல்முனை வடக்குப் பிரதேசத்திலே அமைந்துள்ளதும் தற்போது கல்முனை தெற்கு முஸ்லீம் பிரதேசசெயலகப் பிரிவின்கீழ் நிலத் தொடர்பற்ற முறையிலே இயங்குவதுமான பதினைந்து (15) முஸ்லீம் பெரும்பான்மைக் கிராமசேவகர் பிரிவுகளுள், பெரியநீலாவணையில் அமைந்துள்ள இரண்டு (02) முஸ்லீம் கிராமசேவகர் பிரிவுகளும் மருதமுனையில் அடங்கியுள்ள ஆறு (06) முஸ்லீம் கிராமசேவகர் பிரிவுகளும் நிலத்தொடர்புள்ளவையாக அதாவது அயலிலுள்ளவையாக இருப்பதனால் இந்த எட்டு (08) கிராமசேவகர் பிரிவுகளையும் இணைத்து '**மருதமுனைப்பிரதேச செயலகப் பிரிவு**' **(இல:01)** எனும் பெயரில் புதிய தனியான பிரதேச செயலகப் பிரிவொன்றினை உருவாக்கலாம்.

**இல: 01 – உத்தேச மருதமுனைப் பிரதேச செயலகப் பிரிவு**

| கிராம சேவகர் பிரிவின் பெயர் | கிராம சேவகர் பிரிவின் இலக்கம் | தமிழர் | முஸ்லிம் | சிங்களவர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவு – 01 | KP/72 | - | 2386 | - | - | 2386 |
| பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவு – 02 | KP/72A | - | 1085 | - | - | 1085 |
| மருதமுனை – 2 | KP/67 | - | 1223 | - | - | 1223 |
| மருதமுனை – 3 | KP/67A | - | 4948 | - | - | 4948 |
| மருதமுனை – 1 | KP/67B | - | 1149 | - | - | 1149 |
| மருதமுனை – 4 | KP/67C | - | 1668 | - | - | 1668 |
| மருதமுனை – 5 | KP/67D | - | 1202 | - | - | 1202 |
| மருதமுனை – 6 | KP/68 | - | 3782 | - | - | 3782 |
| **மொத்தம்** | 8 | - | 17443 | - | - | 17443 |
| | | | | | | 100% முஸ்லிம் |

**இல : 02** அப்படி ஆக்கும் போது கல்முனைவடக்குப் பிரதேசத்தில் எஞ்சிய 36 (44 – 08) நிலத் தொடர்போடு கூடிய கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தின் குடிம்பரம்பல் பின்வருமாறு அமைகின்றது. இதனை **உத்தேச வடக்குப் பிரதேச செயலகமாகத்** தரமுயர்த்தலாம் **(இல:02).** இதன்குடிபரம்பல் பின்வருமாறு அமையும்.

**தமிழர் : 31,999**

**முஸ்லீம் : 13,895 (31, 338 – 17,433 = 13, 895)**

**சிங்களவர் : 168**

**ஏனையவர்கள் : 1,083**

**மொத்தம் : 46,345 (63,788-17,443 = 46, 345)**

இல 2- உத்தேச கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு (தரமுயர்த்தப்பட வேண்டியது)

| இல | கிராமசேவகர் பிரிவின் பெயர் | கி.சே.பி இல | தமிழர் | முஸ்லிம் | சிங்களவர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கல்முனை 01 | KP/61/1 | 834 | - | 11 | 229 | 1074 |
| 02 | கல்முனை 01A | KP/61/2 | 1019 | - | 05 | 136 | 1160 |
| 03 | கல்முனை 01B | KP/61/3 | 681 | - | 05 | 109 | 795 |
| 04 | கல்முனை 01C | KP/61/4 | 706 | 02 | 43 | 12 | 763 |
| 05 | கல்முனை 01D | KP/61/5 | 883 | 01 | 03 | 08 | 895 |
| 06 | கல்முனை 01E | KP/61/6 | 997 | - | 05 | 34 | 1036 |
| 07 | கல்முனை 02 | KP/61/7 | 1682 | 07 | 17 | - | 1706 |
| 08 | கல்முனை 02A | KP/61/8 | 1026 | - | 06 | - | 1032 |
| 09 | கல்முனை 02B | KP/61/9 | 744 | - | 13 | 09 | 766 |
| 10 | கல்முனை 03 | KP/59/1 | 538 | - | 06 | - | 544 |
| 11 | கல்முனை 03A | KP/59/2 | 399 | 03 | 23 | 38 | 463 |
| 12 | பாண்டிருப்பு 01 | KP/66/1 | 1119 | - | 01 | 02 | 1122 |
| 13 | பாண்டிருப்பு 01A | KP/66/2 | 778 | - | - | - | 778 |
| 14 | பாண்டிருப்பு 01B | KP/66/3 | 1005 | - | - | 29 | 1034 |
| 15 | பாண்டிருப்பு 01C | KP/66/4 | 800 | - | - | - | 800 |
| 16 | பாண்டிருப்பு 02 | KP/66A /1 | 1891 | - | - | - | 1891 |
| 17 | பாண்டிருப்பு 02A | KP/66A /2 | 792 | - | - | 33 | 825 |
| 18 | பாண்டிருப்பு 02B | KP/66A /3 | 868 | - | - | - | 868 |
| 19 | பாண்டிருப்பு 02C | KP/66A /4 | 1305 | - | - | - | 1305 |
| 20 | நற்பிட்டிமுனை - 1 | KP/62/1 | 976 | 71 | - | - | 1047 |
| 21 | நற்பிட்டிமுனை - 2 | KP/62/2 | 1341 | 46 | - | - | 1387 |
| 22 | நற்பிட்டிமுனை - 3 | KP/62/3 | 833 | 55 | 06 | 340 | 1234 |
| 23 | சேனைக்குடியிருப்பு 01 | KP/69/1 | 1049 | - | - | - | 1049 |
| 24 | சேனைக்குடியிருப்பு01A | KP/69/2 | 1660 | - | - | - | 1660 |
| 25 | சேனைக்குடியிருப்பு01B | KP/69/3 | 1246 | - | - | - | 1246 |
| 26 | பெரியநீலாவணை01 | KP/71/1 | 1387 | - | 04 | 81 | 1472 |
| 27 | பெரியநீலாவணை01A | KP/71/2 | 851 | - | - | - | 851 |
| 28 | பெரியநீலாவணை01B | KP/71/3 | 2138 | - | 13 | 23 | 2174 |
| 29 | பெரியநீலாவணை02 | KP/71/4 | 1607 | 3104 | - | - | 4711 |
| | **உப மொத்தம்** | 29 | 31155 | 3289 | 161 | 1083 | 35688 |
| 30 | நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு 02 | KP/64/B | - | 897 | - | - | 897 |
| 31 | நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு 03 | KP/64 | - | 1146 | - | - | 1146 |
| 32 | நற்பிட்டிமுனை முஸ்லிம் பிரிவு 01 | KP/64/ A | 26 | 1072 | - | - | 1098 |
| 33 | நற்பிட்டிமுனை 04 | KP/64C | - | 1205 | - | - | 1205 |
| 34 | நற்பிட்டிமுனை 05 | KP/64D | - | 1103 | - | - | 1103 |
| 35 | கல்முனை முஸ்லிம் பிரிவு | KP/59 | - | 3992 | - | - | 3992 |
| 36 | இஸ்லாமாபாத் + கல்முனை நகர் | KP/59A | 18 | 1191 | 07 | - | 1316 |
| | **முழு மொத்தம்** | 36 | 31199 | 13895 | 168 | 1083 | 46345 |

| | | |
|---|---|---|
| **தமிழர்** | **:** | **31,999** |
| **முஸ்லிம்** | **:** | **13,895** |
| **சிங்களவர்** | **:** | **168** |
| **ஏனையவர்கள்** | **:** | **1,083** |
| **மொத்தம்** | **:** | **46,345** |

- **குறிப்பு : இவற்றில் KP/59(கல்முனை முஸ்லீம் பிரிவும்),** KP/59A **(இஸ்லாமாபாத் + கல்முனை நகரம் பிரிவும்) எனப் பெயரிடப்பட்டுள்ள கிராமசேவகர் பிரிவுகள் சட்டரீதியற்றவை. இவை முறையே, கல்முனை – 01 அல்லது KP/61/1 மற்றும் கல்முனை – 03 அல்லது KP/59/1 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளின் பகுதியாகவே கருதப்படவேண்டும்.**

இது நிலத்தொடர்புடையதாக இருப்பதனாலும் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாகவும் தமிழ், முஸ்லீம், சிங்களவர் என (பறங்கியர்களும் அடங்குவர்) மூவின மக்களைக் கொண்டதாகவும் இருப்பதனாலும் இதனையும் தனியானதொரு பிரதேச செயலகப் பிரிவாக (இல 2) உருவாக்க (தரமுயர்த்த) முடியும். இது தமிழர்களுக்குத் திருப்பதியான தீர்வாகும். இப்பிரிவில் தமிழர்கள் சுமார் 70% ஆக இருப்பர்.

**இல 03** அப்படி ஆக்கும்போது கல்முனை தெற்கு முஸ்லீம்பிரிவில் எஞ்சியிருக்கின்ற 14 கிராமசேவகர் பிரிவுகளையும் அதாவது கல்முனைக்குடியை இன்னுமொரு தனியான பிரதேச செயலகப் பிரிவாக (இல3) உருவாக்க முடியும். அப்படி உருவாக்கும் போது இந்த உத்தேச மூன்றாவது பிரிவின் மொத்த சனத்தொகை (100% முஸ்லீம்) 23,830 ஆகும்.

**இல 3 - உத்தேச கல்முனை தெற்குப் பிரதேச செயலகப் பிரிவு**

| இல | கிராமசேவகர் பிரிவின் பெயர் | கி.சே.பி இல | தமிழர் | முஸ்லிம் | சிங்களவர் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கல்முனைக்குடி 14 | KP/54 | - | 2088 | - | - | 2088 |
| 02 | கல்முனைக்குடி 13 | KP/54A | - | 2072 | - | - | 2072 |
| 03 | கல்முனைக்குடி 12 | KP/55 | - | 1192 | - | - | 1192 |
| 04 | கல்முனைக்குடி 5 | KP/56 | - | 2019 | - | - | 2019 |
| 05 | கல்முனைக்குடி 11 | KP/56A | - | 1390 | - | - | 1390 |
| 06 | கல்முனைக்குடி 9 | KP/56B | - | 3172 | - | - | 3172 |
| 07 | கல்முனைக்குடி 10 | KP/56C | - | 1168 | - | - | 1168 |
| 08 | கல்முனைக்குடி 8 | KP/56D | - | 1487 | - | - | 1487 |
| 09 | கல்முனைக்குடி 7 | KP/56E | - | 1791 | - | - | 1791 |
| 10 | கல்முனைக்குடி 6 | KP/56F | - | 1322 | - | - | 1322 |
| 11 | கல்முனைக்குடி 1 | KP/58 | - | 1573 | - | - | 1573 |
| 12 | கல்முனைக்குடி 3 | KP/58A | - | 1422 | - | - | 1422 |
| 13 | கல்முனைக்குடி 4 | KP/58B | - | 1242 | - | - | 1224 |
| 14 | கல்முனைக்குடி 2 | KP/58C | - | 1892 | - | - | 1892 |
| | **மொத்தம்** | 14 | - | 23830 | - | - | 23830 |
| | | | | | | | **100% முஸ்லீம்** |

- **குறிப்பு : தேவையேற்பட்டால் இதனை அயலிலுள்ளதும் முன்பு முழுக் கரவாகுப்பற்றுப் (கல்முனை) பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 2002இல் பிரிக்கப்பட்டதுமான தற்போதைய சாய்ந்தமருது பிரதேசசெயலகப் பிரிவுடன் இணைத்தும் விடலாம்.**

இதுவே, தற்போது கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதிலுள்ள (நிலத்தொடர்பற்ற பிரச்சனை உட்பட) பிரச்சினைகளைத் தீர்த்துப் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும். மேற்கூறப்பட்ட இல 1 (உத்தேச மருதமுனை பிரதேசசெயலகப் பிரிவு), இல 2( உத்தேச கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவு – தரமுயர்த்தப் படவேண்டியது), இல 3 ( உத்தேச கல்முனை தெற்குப் பிரதேச செயலகப் பிரிவு) என மூன்று பிரதேச செயலகப்பிரிவுகளை உருவாக்குவது நடைமுறைச் சாத்தியமானது.

அப்படி உருவாக்கும்போது, முஸ்லீம்களுக்கென்று 100% முஸ்லீம்களைக் கொண்ட இரு பிரதேச செலயகப் பிரிவுகளும் (இல 1, இல 3), தமிழர்களுக்கென்று தமிழ், முஸ்லீம், சிங்களவர்களைக் கொண்ட தனியான தமிழ்ப் பெரும்பான்மைப் (70%) பிரதேச செயலகப் பிரிவொன்றும் (இல :2) அமைய வாய்ப்புள்ளது.